بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 18, April 2014 (Tamil)**

## இறைவனின் அந்தஸ்து, அவனது பண்புகள் பற்றி இமாம் மஹ்தி (அலை) அவர்கள் கூறிய விளக்கங்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அவற்றில் அவர்கள் அல்லாஹ்வின் உண்மைத்துவம் என்ன? அவனுடைய அந்தஸ்து என்ன? என்பதைப் பற்றி கூறியிருக்கிறார்கள். மேலும் அவன் எல்லா ஆற்றல்களுக்கான அதிபதி என்பதையும் அவன் தனித்தவன் என்பதையும் எல்லா படைப்பினங்களையும் படைத்தவன் என்பதையும், எல்லாவற்றிக்கும் மரணம் உண்டு; அவனுக்கு மரணம் இல்லை என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் இந்த அண்ட சராசரங்களைப் படைத்த அந்த இறைவன் வரை சென்றடைவதற்கான வழிமுறை இனி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான்; அவர்கள் மூலமாகவே இறைவன் வரை சென்றடைய முடியும். அன்னாரின் அழகிலும் அருளிலும் அன்னாருக்கு நிகரானவர் வேறு யாருமில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இறைவனின் வல்லமைகளை காண்பதற்கு அவன் பக்கம் களங்கமற்ற முறையில் குனிவது அவசியமானது என்றும், அவனை வணங்குவது அவசியம் என்றும் இந்த நிலை மனிதனுக்கு ஏற்பட்டு விட்டால் பிறகு இறைவன் ஓடி வந்து மனிதனை கட்டித் தழுவுகின்றான். அவன் மீது தனது அருள்களின் மழையைப் பொழிய வைக்கின்றான் என்றும் கூறினார்கள். எனவே அவர்கள் மிகவும் வேதனையுடன், உங்களின் இம்மையையும் மறுமையையும் அழகுபடுத்துபவர்களாக ஆகும் பொருட்டு அப்படிப்பட்ட இறைவனுடன் நீங்கள் தொடர்பை ஏற்படுத்துங்கள் எனக் கூறினார்கள். ஓரிடத்தில் அல்லாஹ்வின் உண்மைத்துவம் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''இறைவன் வானம், பூமி ஆகியவற்றின் ஒளி ஆவான். அதாவது மேலேயும் கீழேயும் தென்படுகின்ற ஒவ்வோர் ஒளியும் அது - ஆன்மாக்களில் இருந்தாலும் உடல்களில் இருந்தாலும், சொந்தமானதாக இருந்தாலும் தற்காலிகமானதாக இருந்தாலும், வெளிப்படையானதாக இருந்தாலும் உட்புறமானதாக இருந்தாலும், சிந்தனையில் இருந்தாலும் பகிரங்கமாக இருந்தாலும் அதாவது எல்லாவிதமான ஒளியும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றன. அல்லாஹ்தான் உடல்களில் தென்படும் ஒளியாவான். மேலும் இது, எல்லா உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனின் பொதுவான அருள் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது என்பதையும் எந்தவொரு பொருளும் அவனது அருளிலிருந்து விலகியிருக்கவில்லை என்பதையுமே சுட்டிக் காட்டுகின்றது.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' திருக்குர்ஆனில் நமது இறைவன் தனது சிறப்புப் பண்புகளைக் குறித்து,**குல் ஹுவல்லாஹு அஹது. அல்லாஹுஸ் ஸமது. லம் யலிது. வலம் யூலது. வலம் யகுன்ல் லஹூ குஃபுவன் அஹது** என்று கூறுகிறான். அதாவது, உங்கள் இறைவன் எப்படிப்பட்டவன் என்றால், அவன் தன் தன்மையிலும் பண்புகளிலும் தனித்தவனாவான். எதுவும் அவனைப் போன்று தொன்றுதொட்டு இருந்து வருவதுமில்லை; நிரந்தரமாக இருப்பதுமில்லை. **எந்தவொன்றின்**

அவன் தன் தன்மையிலும் பண்புகளிலும் தனித்தவனாவான். எதுவும் அவனைப் போன்று தொன்றுதொட்டு இருந்து வருவதுமில்லை; நிரந்தரமாக இருப்பதுமில்லை. **எந்தவொன்றின்**அவன் தன் தன்மையிலும் பண்புகளிலும் தனித்தவனாவான். எதுவும் அவனைப் போன்று தொன்றுதொட்டு இருந்து வருவதுமில்லை; நிரந்தரமாக இருப்பதுமில்லை. **எந்தவொன்றின் பண்புகளும் அவனது பண்புகளுக்கு ஒப்பானவையாக இல்லை**.. மனிதனின் அறிவு ஒரு கற்றுக் கொடுப்பவரின் தேவையுடையதாக இருக்கிறது. மேலும் அது எல்லைக்குட்பட்டதுமாகும். ஆனால் (இறைவனாகிய) அவனது அறிவு எந்தவொரு கற்றுக் கொடுப்பரின் தேவையுடையதாக இல்லை. அவ்வாறு இருந்தபோதிலும் அது எல்லைக்கு அப்பாற்பட்டது. மனிதனின் கேட்கும் திறனுக்கு காற்று தேவைப்படுகிறது. எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. ஆனால் இறைவனின் கேட்கும் திறன் சொந்த ஆற்றலினால் இருக்கிறது. மேலும் அது எல்லைக்குட்பட்டதுமன்று. மனிதனின் பார்வைப் புலன் சூரியன் அல்லது மற்ற ஒளியின் தேவையுடயதாக இருக்கிறது. மேலும் எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. ஆனால் இறைவனின் பார்வைப் புலன் சொந்த ஒளியைக் கொண்டதாக இருக்கிறது. மேலும் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. அவ்வாறே மனிதனின் படைக்கும் ஆற்றல் ஒரு மூலப் பொருளின் தேவையைக் கொண்டதாக இருக்கிறது.மேலும் காலத்தின் தேவையைக் கொண்டதாகவும் இருக்கிறது. மேலும் எல்லைக்குட்பட்டதுமாகும். ஆனால் இறைவனின் படைக்கும் ஆற்றல் எந்தவொரு மூலப் பொருளின் தேவையுடையதாகவுமில்லை; எந்தவொரு நேரத்தின் தேவையுடையதாகவுமில்லை; மேலும் எல்லைக்கு அப்பாற்பட்டதுமாகும். ஏனெனில் அவனுடைய எல்லா பண்புகளும் நிகரற்றவையும் இணையற்றவையுமாகும். அவனுக்கு இணையானது எதுவுமில்லாததைப் போன்றே அவனது பண்புக்கு இணையானதும் எதுவுமில்லை. அவன் ஒரு பண்பில் குறைபாடுள்ளவனாக இருந்தாலும் பிறகு அவன் எல்லா பண்புகளிலும் குறைபாடுள்ளவனாக இருப்பான். எனவே அவன் தனது தன்மையைப் போன்று தனது எல்லா பண்புகளிலும் நிகரற்றவனாகவும் இணையற்றவனாகவும் இருக்காதவரை அவனது தவ்ஹீது நிலைபெற முடியாது.''

பிறகு இதற்கு அடுத்தபடியாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' இதற்கு அடுத்தபடியாக மேற்கண்ட (குல் ஹுவல்லாஹு அஹது.... என்ற) வசனத்தின் பொருள், இறைவன் யாருடைய மகனுமல்லன்; அவனுக்கு யாரும் மகனுமல்லன். ஏனெனில் அவன் சொந்தமாக தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். அவனுக்கு தந்தையின் தேவையுமில்லை; மகனின் தேவையுமில்லை.''

இதுதான் ஈமானை அடிப்படையாகக் கொண்ட திருக்குர்ஆன் கற்றுத் தந்திருக்கும் தவ்ஹீது ஆகும்.பிறகு இறைவனின் ஏகத்துவத்திற்கான சான்றை **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** திருக்குர்ஆனின் கொள்கைகளிலிருந்தே சான்று பெற்றவாறு கூறுகிறார்கள்:

''பிறகு இதற்குப் பின்னர் அவன் தனித்தவன்; இணையற்றவன் என்பதற்கு அறிவுப்பூர்வமான சான்று ஒன்றைக் குறிப்பிட்டவாறு, **லவ் கான ஃபீஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹ லஃபஸததா** எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. (அதாவது பூமி வானம் ஆகிய இவ்விரண்டிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒரு வணக்கத்திற்குரியவன் இருந்திருந்தால் அவ்விரண்டும் அழிந்து போயிருக்கும் திருக்குர்ஆன்-21:23) என்ற ஒரு அறிவுப்பூர்வமான சான்றை எடுத்துரைத்தார்கள். பிறகு **வமா கான மஅஹூ மின் இலாஹின்** என்று கூறினார்கள்.

அதாவது வானம் பூமி ஆகியவற்றில் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவனாகிய அவன் ஒருவனைத் தவிர வேறு ஓர் இறைவனும் இருந்திருந்தால் இவ்விரண்டும் சீர்குலைந்து போயிருக்கும். ஏனெனில் அவை கடவுளர்களின் ஒருவர் இன்னொருவருக்கெதிராக செயல்பட்டிருக்கும். எனவே இந்த வேறுபாடு மற்றும் பிளவின் காரணமாக அது உலகின் குழப்பத்திற்கு வழிகோலியிருக்கும். மேலும் தனித்தனி படைப்பாளன் இருந்தால் அவர்களில் ஒவ்வொருவனும் தனது படைப்பினங்களின் நன்மையையே விரும்புவான். மேலும் அவர்களின் நலனுக்காக மற்றவர்களை அழிப்பதை ஆகுமானதாகக் கருதுவான். எனவே இதுவும் உலகின் குழப்பத்திற்கு காரணமாக அமையும். எனவே ஒருவனை விட அதிகமாக இன்னோர் இறைவன் இருக்க முடியும் என்ற கேள்விக்கே இடமில்லை.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இஸ்லாம் மார்க்கத்தினுடைய எல்லா கட்டளைகளின் உண்மையான குறிக்கோள், இஸ்லாம் என்ற சொல்லில் அடங்கியுள்ள உண்மைநிலை வரை எட்ட வேண்டும் என்பதுதான். இதன் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் திருக்குர்ஆனில் இறைவனை அன்பிற்குரியவனாக ஆக்குவதற்கு முயற்சி செய்யும் போதனைகள் இருக்கின்றன. சில இடங்களில் அவனுடைய அழகையும் பொலிவையும் காட்டுகின்றன. சில இடங்களில் அவனுடைய அருள்களை நினைவு கூறுகின்றன. ஏனெனில் ஒருவர் மீது அன்பு ஏற்படுவது ஒன்று அழகின் காரணமாக உள்ளத்தில் உருவாகிறது. அல்லது அருளின் காரணமாக உருவாகிறது. எனவே இறைவன் தனது எல்லா மேன்மைகளைப் பொருத்த அளவில் தனித்தவனும் இணையில்லாதவனும் ஆவான். அவன் அனைத்து முழுமையான பண்புகளின் தொகுப்பு ஆவான். மேலும் அவன் எல்லா தூய்மையான ஆற்றல்களின் தோற்றமாவான். மேலும் அவன் எல்லா படைப்பினங்களை தோற்றுவித்தவன் ஆவான். மேலும் அவன் எல்லா அருள்களின் நீரூற்றாவான். மேலும் நற்பலன் அளிப்பதிலும் தண்டனை கொடுப்பதிலும் அவன் அதிபதியாவான். அவன் எல்லாவற்றின் திரும்பும் இடமாவான். அவன் தொலைவில் இருந்தபோதிலும் அருகில் இருக்கின்றான்; அவன் அருகில் இருந்தபோதிலும் தொலைவில் இருக்கிறான். அவன் எல்லாவற்றையும் விட மேலே இருக்கின்றான்; ஆயினும் அவனுக்குக் கீழே எதுவுமில்லை என்று கூட முடியாது. அவன் எல்லாவற்றையும் விட மறைவானவனாவான்; ஆயினும் அவனை விட ஒன்று வெளிப்படையானது என்று கூற முடியாது. அவன் சுயமாக உயிருள்ளவன்; அவனைச் சார்ந்து எல்லாம் உயிருடன் இருக்கின்றன. அவன் சுயமாக நிலைபெற்றிருப்பவன்; மேலும் எல்லாம் அவனைச் சார்ந்து நிலைபெற்றிருக்கின்றன. அவன் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிறான்; அவனைத் தாங்கிக் கொண்டிருப்பவர் யாருமில்லை. அவன் இல்லாமல் தானாகவே உருவானது எதுவுமில்லை; அல்லது அவனில்லாமல் தானாகவே உயிருடன் இருக்க முடியாது. அவன் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளான். ஆனால் எப்படி சூழ்ந்துள்ளான் என நாம் கூற முடியாது. அவன் வானம், பூமி ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு பொருளின் ஒளியாவான். ஒவ்வோர் ஒளியும் அவனது கையினாலேயே ஒளிர்கின்றது. அது அவனது கையின் நிழலேயாகும். அவன் எல்லா உலகங்களையும் படைத்து காத்தோம்புபவன் ஆவான். அவனிடமிருந்து வளர்ச்சியைப் பெறாத, சுயமாகவே உருவான எந்தவோர் உயிரும் இல்லை. எந்த ஓர் ஆன்மாவுக்கும் அவனிடமிருந்து கிடைக்காத, சுயமாக எந்தவோர் ஆற்றலும் இல்லை. அவனது அருள்கள் இரு வகைப்படும். ஒன்று, எந்தவொரு செயலைச் செய்பவரின் செயலும் இல்லாமல் பழமையிலிருந்தே வெளிப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தண்ணீர், நெருப்பு, காற்று மற்றும் நமது வசதிக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த உலகத்திலுள்ள எல்லா அணுக்கள் ஆகியவை. அவ்வாறே என்னென்ன பொருள்கள் நமக்கு தேவையாக இருந்தனவோ அவை அனைத்தும் நமது பிறப்பிற்கு முன்னரே நமக்காக ஆயத்தமாக்கப்பட்டன. மேலும் இவையெல்லாம் நாம் இல்லாதபோது-நமது எந்த செயலும் இல்லாதபோது உருவாக்கப்பட்டன. சூரியன் எனது செயலின் காரணமாக உருவாக்கப்பட்டது என்றோ அல்லது பூமி எனது நற்செயலின் காரணமாக உருவாக்கப்பட்டது என்றோ யார் கூற முடியும்? சுருக்கமாக, இவை மனிதன் மற்றும் அவனுடைய செயல்களுக்கு முன்னர் வெளிப்பட்டு விட்டன. அவை எவருடைய செயல்களின் விளைவு அல்ல. இரண்டாவது அருள் செயல்களின் விளைவாக உருவாக்கப்படுகின்றன.

பிறகு இக்காலத்தில் இறைவன் வரை சென்றடைவதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகும் என்பதை விளக்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' ஆற்றல் மிக்க, உண்மையான, முழுமையான இறைவனுக்கு நமது ஆன்மாவும் நமது ஒவ்வோர் அணுவும் சஜ்தா செய்கின்றது. அவனது கையினால் ஒவ்வோர் ஆன்மாவும், படைப்பினங்களின் ஒவ்வோர் அணுவும் தனது எல்லா ஆற்றல்களுடனும் வெளிப்பட்டது. அவன் மூலமாக எல்லாம் நிலைபெற்றிருக்கிறது. எந்தவொரு பொருளும் அவனது அறிவிலிருந்தோ, அவனது ஆதிக்கத்திலிருந்தோ, அவனது படைப்பிலிருந்தோ வெளியில் இல்லை. எந்த தூய நபியின் மூலமாக நாம் நமது இறைவனைப் பெற்றோமோ அந்த நபியின் மீது ஆயிரக்கணக்கான சலவாத்தும், சலாமும், அருளும், அருட்கொடையும் இறங்கட்டுமாக. அந்த இறைவன் தானாகவே உரையாடி தனது இருப்பிற்கான அடையாளத்தை நமக்குக் காட்டுகிறான். மேலும் தானே, வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அடையாளத்தைக் காட்டி தனது முழுமையான ஆற்றல்களையும்

சக்திகளையும் கொண்ட பிரகாசிக்கும் முகத்தை காட்டுகின்றான். எனவே நாம் எத்தகைய இறைதூதரைப் பெற்றோம் என்றால், அவர் நமக்கு இறைவனைக் காட்டியிருக்கிறார். மேலும் தனது முழு ஆற்றலினால் ஒவ்வொரு பொருளையும் படைத்த அத்தகைய இறைவனை அவர் நமக்குக் காட்டினார். அவனது ஆற்றல் எத்தகைய மகத்துவத்தை தன்னிடம் கொண்டுள்ளது! அவன் இன்றி எந்த ஒரு பொருளும் உருவெடுக்கவில்லை. அவனது ஆதரவின்றி எந்தவொரு பொருளும் நிலைபெற முடியாது. நமது அந்த உண்மையான இறைவன் எண்ணற்ற அருள்களைக் கொண்டவனாவான்; எண்ணற்ற ஆற்றல்களைக் கொண்டவனாவான்; எண்ணற்ற அழகைக் கொண்டவனாவான்; எண்ணற்ற அருட்கொடைகளைக் கொண்டவனாவான். அவனையன்றி வேறு எந்த இறைவனுமில்லை.''

பிறகு இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' இறைவனின் இருப்பு மிகவும் மறைவிலும் மறைவானதாகும்; அகத்திலும் அகத்தில் இருக்கக் கூடியதாகும். அதனை மனித அறிவு தனது ஆற்றலினால் மட்டும் புரிந்து கொள்ள முடியாது.''

நாத்திகர்கள் இதைத்தான் கூறுகின்றனர். நாங்கள் அறிவின் மூலமாக இறைவனை எப்படி புரிந்து கொள்வது? அல்லது அறிவினாலேயே புரிய வைக்க முடியுமா? எனக் கேட்கின்றனர். எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''(இறை இருப்பாகிய) அதனை மனித அறிவு தனது ஆற்றலினால் மட்டும் புரிந்து கொள்ள முடியாது. எந்தவோர் அறிவுப்பூர்வமான சான்றும் அவனது இருப்பிற்கு உறுதியான சான்றாக முடியாது. ஏனெனில் அறிவின் ஓட்டமெல்லாம் இந்த உலகின் படைப்புகளைப் பார்த்து ஒரு படைப்பாளனின் தேவையை உணரும் அளவுக்கு மட்டும்தான் இருக்கிறது.''

அதாவது ஒன்றைப் பார்த்து இதை யார் படைத்தார் என்ற அளவு வரைதான் அறிவு செல்ல முடியும்.

''ஆனால் தேவையை உணர்வது என்பது வேறு விஷயம்; எந்த இறைவனின் தேவை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த இறைவன் உண்மையில் இருக்கவும் செய்கிறான் என்ற அந்த ஐனுல் யகீன் ( கண்ணால் கண்டு உறுதி கொள்ளுதல்) என்ற படித்தரம் வரை சென்றடைவது என்பது வேறு விஷயம். அறிவின் முறை குறைபாடுள்ளதாகவும், நிறைவற்றதாகவும், சந்தேகத்திற்குரியதாகவும் இருக்கிறது. எனவே ஒவ்வொரு தத்துவவாதியும் வெறும் அறிவினால் மட்டும் இறைவனை கண்டுணர முடியாது. மாறாக, வெறும் அறிவினால் மட்டும் இறைவனை கண்டறிய விரும்பும் பெரும்பாலார் கடைசியில் நாத்திகராகி விடுகிறார்கள்.''

பிறகு எல்லா விவகாரங்களிலும் இறைவனின் பக்கமே கவனத்தை வைக்க வேண்டும் என்பதற்காகவும் இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கையூட்டுவதற்காகவும் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறுகிறார்கள்:**

'' நமது இறைவனிடத்தில் எண்ணற்ற அற்புதங்கள் இருக்கின்றன. ஆனால் உண்மையுடனும் நன்றியுணர்வுடனும் அவனுக்காக ஆகிவிட்டவர்கள்தான்அவற்றைக் காண்கின்றனர். தனது ஆற்றல்களின் மீது நம்பிக்கை கொள்ளாத, அவனுக்கு உண்மையானவர்களாகவும், நன்றியுணர்வுள்ளவர்களாகவும் இல்லாத மற்றவர்களுக்கு அவன் அற்புதங்களைக் காட்டுவதில்லை. **எல்லாவற்றின் மீதும் ஆற்றல் கொண்ட ஓர் இறைவன் தனக்கு இருக்கிறான் என்பதை அறியாத மனிதன் எவ்வளவு பேறிழந்தவனாவான்!** நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம்; மேலும் எல்லா அழகையும் அவனிடம் கண்டோம். இந்த செல்வம் உயிரைக் கொடுப்பதனால் கிடைக்கும் என்றாலும் அது வாங்குவதற்கு தகுதி பெற்றதாகும். எல்லாவற்றையும் இழப்பதனால் கிடைக்கும் என்றாலும் இந்த மாணிக்கம் வாங்கத் தகுந்தது. இழப்பிற்குரியோரே! அந்த நீரூற்றின் பக்கம் ஓடிச் செல்லுங்கள்; அது உங்கள் தாகத்தை தணிக்கும். அது வாழ்விற்கான தண்ணீராகும். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? இந்த நற்செய்தியை எவ்வாறு உள்ளங்களில் பதியச் செய்வேன். உங்களுக்கு ஓர் இறைவன் இருக்கிறான் என மக்கள் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசு கொண்டு வீதிகளில் அறிவிப்பு செய்வேன்? கேட்பதற்காக மக்களின் காதுகள் திறப்பதற்கு நான் எந்த மருந்தைக் கொண்டு மருத்துவம் செய்வேன்?''

உயிருள்ள இந்த இறைவனின் தூதுச் செய்தியை இந்தக் காலத்தின் இமாமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசருமாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பின்பற்றியவாறு உலகிற்கு எட்டச் செய்யும் நல்வாய்ப்பை இறைவன் நமக்கு வழங்குவானாக. உயிருள்ள இறைவன் இன்றும் இருக்கிறான்; அவன் கேட்கின்றான்; அடையாளங்களையும் காட்டுகின்றான். அந்த இறைவனின் பக்கம் திரும்புங்கள் என்ற உணர்வை நாம் உலகிற்கு ஊட்டக் கூடியவர்களாக ஆவோமாக. நாமும் அந்த இறைவனோடு உயிருள்ள ஒரு தொடர்பை உருவாக்கக் கூடியவர்களாக ஆவோமாக. அவனுடைய போதனைகளின்படி செயல்படுபவர்களாக ஆவோமாக. அவனை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக. அவனுடைய பண்புகளைப் பற்றி சரியான ஞானத்தைப் பெறுபவர்களாக ஆவோமாக. அவனுடைய அருள்களுக்கு வாரிசாக ஆவோமாக. அல்லாஹ்வுக்கு இணை வைப்பதிலிருந்து நாமும் நமது தலைமுறைகளும் எப்போதும் எல்லா வகையிலும் பாதுகாப்பாக இருப்போமாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***